# மனோதத்துவ நிபுனருடன் உரையாடவேண்டுமா?

இக்கட்டான ஒரு வாழ்க்கைக்கட்டத்தில் இருக்கும் மனிதர்களிற்கு வேறுபட்ட உதவிகள் தேவைப்படலாம். இது சம்பந்தமாக கிடைக்கப்பெறும் உதவிகளில் ஒன்று மனோதத்துவ நிபுணரிடம் சிகிச்சை பெறுதலாகும்.

## *மனோதத்துவ நிபுணர் என்பவர் யார்?*

மனோதத்துவநிபுணர்கள் 6 - 7 வருடங்கள் பல்கலைக்கழகத்தில் கல்வியயின்று பின்னர் அனேகமானோர் மேலதிகமாக விசேடத்துவம் பெறுவதற்காக உயர்கல்வி பயில்வதுண்டு. மனோதத்துவநிபுணர் (PSYKOLOG) என்னும் அந்தஸ்து சட்டரீதியாக காக்கப்பட்டது. இதன் கருத்து இதற்குரிய இக் கல்வியைப் பயின்றவர்கள் மாத்திரமே நோர்வேயில் தம்மை மனோதத்துவநிபுணர்கள் என அழைத்துக்கொள்ளலாம். மனிதர்களின் உணர்வுகள் மற்றும் இவற்றால் ஏற்படும் பிரதிபலிப்புக்கள் என்பன பற்றி மனோதத்துவநிபுணர்கள் விசேட தேர்ச்சி கொண்டுள்ளார்கள். மனோதத்துவநிபுணர்கள் தமது தொழிலில் பல்வேறுபட்ட செயற்பாடுகளைக் கொண்டுள்ளார்கள். தமது வாழ்க்கைநிலைவரத்தின் விளைவாக மனோயியல் சிக்கல்களைக் கொண்ட மனிதர்கள் சம்பந்தமாக தொழிலாற்றுவது மனோதத்துவநிபுணர்களின் வேலையின் ஒரு பிரதான பகுதியாகும்.

## *மனோதத்துவநிபுணர்கள் எவ்வாறு செயற்படுகிறார்கள்?*

பிள்ளைகள் மற்றும் வளர்ந்தவர்களை குணப்படுத்துவது மற்றும் வருத்தத்தைக் கண்டுபிடிப்பது போன்றவற்றிற்கு மனோதத்துவநிபுணர்கள் பிரபல்யமான அங்கீகரிக்கப்பட்ட வழிமுறைகளைப் பயன்படுத்துவார்கள். சிக்கலான விடயங்களைப் பற்றி பேசிக்கொள்வதன் மூலம் வேதனையான நினைவுகள், யோசனைகள் மற்றும் உணர்வுகள் என்பவற்றால் உருவாகும் அவலங்களை குறைத்துக்கொள்ளலாம். மேலும் இவ்வாறு மனோதத்துவநிபுனரும் உதவிகோருபவரும் ஒன்றிணைந்து சம்பந்தப்பட்ட வாழ்கைச் சூழ்நிலையை சிறந்தவண்ணம் கையாளக்கூடிய யுத்திகளை வகுக்கலாம். குடும்பங்களிற்குள் உள்ள சிக்கலான சூழ்நிலையை மாற்றுவதற்கும் ஒரு மனோதத்துவநிபுணர் உதவலாம். மனோதத்துவநிபுணர்கள் மருந்து வழங்குவதில்லை, ஆனால் தேவையேற்படின் மருந்துத் தேவை சம்பந்தமாக வைத்தியர்களுடன் ஒத்துழைப்பதுண்டு.

இடம் மாறுவதற்காக அல்லது புது வதிவிடம் கோரி விண்ணப்பிப்பதற்காக சிபாரிசுக் கடிதம் ஆகிய அன்றாட விடயங்களிற்கு உதவிகோரும் நபர்களுடன் ஒரு மனோதத்துவநிபுணர் பேசிக்கொள்வதில்லை.

## *தகவல் காப்புக் கடமை*

மனோதத்துவநிபுணர்களிற்கு இவர்கள் ஆற்றும் வேலையில் தகவல் காப்புக் கடமையுண்டு. இதன் கருத்தாவது மனோதத்துவநிபுணரிற்குக் கூறும் விடயங்கள், உதவி கேட்பவர் சம்மதம் அளித்தாலே தவிர, ஏனைய குடும்ப அங்கத்தவர்களிற்குகோ, வைத்திய இலாகாவிற்கோ, பாடசாலைக்கோ, சமூகநலம்பேணல் நிலையத்திற்கோ அல்லது போலீசிற்கோ, மனோதத்துவநிபுணரால் கூறமுடியாது. பிள்ளை ஒன்று மிகவும் துன்பப்பட்டால் அல்லது மனித உயிரொன்றிற்கு ஆபத்து ஏற்பட்டால் மாத்திரமே இதிலிருந்து விதிவிலக்குச் செய்துகொள்ளலாம்.

## *மொழிபெயர்ப்பாளர்:*

தனது உணர்வுகளைப்பற்றி தனது தாய்மொழியை விட வேறு மொழியில் பேசிக்கொள்வது மிகவும் கடினமான ஒரு விடயம். இதன் காரணத்தால் உதவி நாடுபவர் நோர்வேஜிய மொழியைச் சற்று பயின்றிருந்தாலும் மொழிபெயர்ப்பாளரை உபயோகிப்பது பயனுள்ளதாக இருக்கும். இவ் உரையாடல்களின் போது பேசப்படுபவை பற்றி மொழிபெயர்ப்பாளரிற்கும் தகவல் காப்புக் கடமையுண்டு.